**17.08.2023**
**OS 26/2019**
**பி.வா.சா.2 பூமிராஜ்**
**குறுக்கு விசாரணை:-**

வாதி-பெரியதம்பி என்னுடன் உடன் பிறந்த மூத்தவர். 1ம் பிரதிவாதி எனது தகப்பனார். 2 முதல் 7 வாதிகள் எனது அண்ணன் பெரியதம்பியின் வாரிசுகள் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி மீனாட்சி மற்றும் 7ம் பிரதிவாதி-அனந்தம்மாள் என்னுடன் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் 07.04.2015ல் இறந்துவிட்டார். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோதுதான் எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் 2015ல் இறந்துவிட்டார். வாதி-பெரியதம்பியும் 2019ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாங்கள் பூர்வீகமாக விவசாயம் செய்து வரும் குடும்பம் என்றால் சரிதான். இந்த வழக்கில் எத்தனை இலக்க சொத்துக்கள் வழக்கு சொத்துக்களாக உள்ளது என்று தெரியாது. வழக்கு சொத்துக்களில் எவ்வளவு நஞ்சை, புஞ்சை என்று தெரியுமா என்றால் நஞ்சை-32 செண்ட், மற்றவை புஞ்சை. வழக்கு சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் சுமார் 3 ஏக்கர் 80 செண்ட் இருக்கும். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான் என்றால் சரிதான். நான் 5வது வரை படித்துள்ளேன். நான் கையெழுத்தை ஆங்கிலத்தில்தான் போடுவேன். என்னுடைய பூர்வீக வீடு தற்போது இடிந்தநிலையில் உள்ளது என்றால் இல்லை, அதில் குடியிருக்கிறார்கள். என்னுடைய குடும்பத்திற்கு மொத்தம் 2 வீடுகள் பாத்தியம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள எந்தெந்த சொத்துக்கள் உயில் மூலம் பாத்தியம் என்றால் சர்வே எண்.393/3, 327, மற்ற சர்வே எண்கள் ஞாபகமில்லை. 1ஏக்கர் 5செண்ட் எனது தாயார் பெயரில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். சாட்சி அது எனது அப்பா தாயார் பெயரில் கிரையம் வாங்கியதாக சொல்கிறார். இந்த வழக்கில் நான் தனியாக எதிர்வழக்குரை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். (குறிப்பு:-தனியாக தாக்கல் செய்யவில்லை.) 4ம் பிரதிவாதி-மீனா தாக்கல் செய்த எதிருரையைதான் நான் ஏற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த எதிர்வழக்குரை 5வது பாராவில் கூட்டு குடும்பமாக இருந்தபோது வாதி, 2, 3 பிரதிவாதிகள் பெயரில் 1ம் பிரதிவாதி சொத்துக்கள் வாங்கி கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, நாங்கள் தனித்தனியாகத்தான் வாங்கினோம். அந்த சொத்துக்கள் 1980, 1984, 1986 காலகட்டங்களில் கிரையம் பெறப்பட்டது. அந்த சொத்துக்கள் எங்கள் மூன்றுபேர்கள் பெயரில்தான் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை கிரையம் வாங்கும்போது எங்களுக்கு தனிப்பட்ட வருமானம்

ஏதும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை என் தகப்பனார்தான் எங்கள் பெயரில் வாங்கி கொடுத்தார் என்றால் நாங்கள் சுயசம்பாத்தியமாகத்தான் வாங்கினோம். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் 1980, 1984, 1986 காலகட்டங்களில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் எங்களுடைய சுயசம்பாத்தியத்தில்தான் வாங்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா உயில் பி.வா.சா.ஆ.17 பற்றி எனக்குத் தெரியாது. எனது அண்ணனுக்கு பி.வா.சா.ஆ.17 எழுதி வைக்கும் சமயம் எனக்குத் தெரியாது, எங்களுக்கு தெரியாமல் எழுதி வைத்துள்ளார். பத்திர அலுவலகத்திற்கு நாங்கள் அப்பாவை அழைத்து செல்லவில்லை. யார் கையெழுத்து போட்டார்கள் என்றும் தெரியாது. உயிலில் எனது அப்பா கையெழுத்து போட்ட விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.